செய்தி வெளியீடு எண் : 415 நாள் : 01.03.2023

# செய்தி வெளியீடு

இன்று (01.03.2023) தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைமை அலுவலகத்தில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் பணிபுரிந்து பணியின்போது உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் திரு. பூச்சி எஸ்.முருகன் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் புதிதாக பொறுப்பேற்கும் 53 இளநிலை உதவியாளர்கள், 3 தொழில்நுட்ப உதவியாளர்கள், 1 தட்டச்சர், 2 ஓட்டுநர்கள், 4 அலுவலக உதவியாளர்கள் ஆகியோருக்கு பணி நியமன ஆணைகளும், 14 இளநிலை வரைவு அலுவலர்களுக்கு வரைவு அலுவலர்களாகவும், 1 கண்காணிப்பாளருக்கு உதவி வருவாய் அலுவலராகவும், 3 உதவியாளர்களுக்கு கண்காணிப்பாளர்களாகவும் பதவி உயர்வு ஆணைகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, இ.ஆ.ப., வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர் திரு. சரவணமூர்த்தி மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in